சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - நாமக்கல் மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான காசாளர்/இளநிலை உதவியாளர் திரு.G.குமரகுருபரன் என்பவரின் மகள் செல்வி கு.அகிலாஜெட்கின், இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை

அரசாணை (3ப) எண்.47

நாள்:20.10.2022.
சுபகிருது, ஐப்பசி 3
திருவள்ளுவர் ஆண்டு 2053.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்:23.01.2020.
2. நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) நடவடிக்கைகள் ந.க.எண்.நி4/19974/2021, நாள் 11.11.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.13060/2020/டி1, நாள் 02.06.2022.

*****

ஆணை:

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், பணியில் இருக்கும்போது காலமான அரசுப்

பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், நாமக்கல் ஊராட்சி ஒன்றியத்தில் காசாளர்/இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 21.12.2020 அன்று பணியிடை காலமான திரு.G.குமரகுருபரன் என்பவரின் மகள் செல்வி கு.அகிலாஜெட்கின், என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் நாமக்கல் மாவட்டத்தில் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 ஆக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அவர் 12.11.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலும், அவர் தனது கடிதத்தில், மறைந்த அரசு ஊழியரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என நாமக்கல் வட்டாட்சியர் சான்றளித்துள்ளார் என்றும், அவரது மகள் செல்வி கு.அகிலாஜெட்கின், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 26.03.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 16.05.1999 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 21 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 21 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 22 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி கு.அகிலாஜெட்கின், என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நாமக்கல் மாவட்ட ஊரக

வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 12.11.2021 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு தனியரின் பணியானது வரன்முறை செய்யப்படுவதால் தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 17.09.2022-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.15977/LG.1/2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண்.3275844/ஜி.1/2022, நாள்: 11.10.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை -18/20.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.
நகல்:
செல்வி கு.அகிலாஜெட்கின், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, நாமக்கல் மாவட்டம்.
(வழி: மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மே.கு.ந.க.எண்.நி4/19974/2021
நாள் – 30 .06.2023

மாவட்ட ஆட்சியரகம்
(வளர்ச்சிப்பிரிவு) நாமக்கல்

அரசாணை (3ப) எண்.47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை, நாள் 28.10.2022 – ஆனது நகலிடப்படுகிறது.

30.06.2023
மாவட்ட ஆட்சியருக்காக,
நாமக்கல்.

பெறுநர்

செல்வி.கு.அகிலாஜெட்கின்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப்பிரிவு),
நாமக்கல் (அலுவலகம் மூலமாக)

நகல் – இவ்வலுவலக நி5 இருக்கை எழுத்தருக்கு (தனியருக்கு இரட்டை பிரதிகளில் சார்வு செய்து, சார்வு நகல் அனுப்பிவைக்கும் பொருட்டு).

நகல் – "நி2, நி3, நி4" – இருப்புக்கோப்பிற்கு

**மே.கு.ந.க.எண். நி5/ 9432/2023,**
**நாள் – 07 .07.2023.**
**திருவள்ளுவராண்டு 2054/ சோபகிருது/ ஆனி–22**

**மாவட்ட ஆட்சியரகம்,**
**(வளர்ச்சிப் பிரிவு), நாமக்கல்.**

// அனுப்பலாகிறது //

**(ஒம்)/–ப.தங்கவேலு,**
**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),**
**நாமக்கல்.**

**// உண்மை நகல் //**

7/7/23
**மாவட்ட மேலாளர் (வளர்ச்சி)**

பெறுநர்
செல்வி.கு.அகிலாஜெட்கின், இளநிலை உதவியாளர்,
மாவட்ட ஆட்சியரகம் (வளர்ச்சிப் பிரிவு), நாமக்கல்.